

30/=

# நண்பர்கள்
# NANPARKAL

இதழ் 01 | 2009 வைகாசி 1 - 14 | பக்கங்கள் 16

யாழ். மாவட்டத்தின் முதலாவது விளையாட்டு சஞ்சிகை

உள்ளே

ஐ.பி.எல். நடந்த சுவாரஸ்யங்கள்



யாழ்ப்பாணத்தின் கிரிக்கெட் வரலாறு (தொடர்)



நவீன உதைபந்தாட்ட வரலாறு






யாழ்ப்பாண விளையாட்டுக்களையும், வீர வீராங்கனைகளையும் ஊக்குவிக்கும் 'நண்பர்கள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள்
NANPARKAL

## உங்கள் ஆதரவை வேண்டும் 'நண்பர்கள்' சஞ்சிகை

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுக்களுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமே 'நண்பர்கள', சஞ்சிகை உங்கள் கரங்களை வந்தடைய உந்து சக்தியாக அமைந்தது.

நண்பர்களின் சஞ்சிகை யாழ்ப்பாணத்தின் விளையாட்டு வீர, வீராங்கனைகள் பற்றியும், அருகி வரும் தமிழ் பாரம்பரியம் பற்றியும் எமது தற்கால சந்ததியினருக்கு வழங்கவுள்ளது.

இவர்களை ஊக்குவிப்பதுடன் குடா நாட்டிலிருந்து சர்வதேச மட்டத்துக்கு - தரதுக்கு - முன்னேற்ற ஊக்கமளிப்பதாகவும இருக்கும்

எதிர்வீரசிங்கம், ஆழிக்குமரன் ஆனந்தன்............ போன்றோர். விளையாட்டுத் துறையில் யாழ். மண்ணின் பெருமையை உலகளாவிய ரீதியில் பதித்தார்கள்.

அதே போன்று மேலும் பல வீர, வீராங்கனைகள் இங்கு உருவாக வேண்டும். என்ற அவாவின்-கனவின் வெளிப்பாடே இன்று நண்பர்கள் சஞ்சிகையாக உருப்பெற்றுள்ளது.

பக்கஞ்சாராமல் விருப்பு, வெறுப்பின்றி விளையாட்டுத்துறையின் வளர்ச்சியை மட்டுமே வெளிவரும் என முதல் இதழ் முகிழ்ந்த இந்த வேளையில் உறுதியளிக்கின்றோம்.

எமது இந்த முதல் முயற்சிக்கு ஆதரவு அளித்த பாடசாலைகளுக்கும், விளையாட்டுக்கழகங்களுக்கும அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கும் இச் சந்தர்ப்பத்தில் தொடர்ந்தும் தங்களது பேராதரவையும் நாம் வேண்டி நிற்கின்றோம்.

எத்தனை தடைகள் வந்தாலும் எமது மக்கள் விளையாட்டுகளுக்கு அளித்து வரும் ஆதரவை கைவிடவில்லை. அதே போல் எமது சஞ்சிகைக்கும் ஆதரவு தர வேண்டி இத் தனி முயற்சியான இதழை நாம் தங்கள் கைகளில் தவழ விடுகின்றோம்.

நமது இந்த முயற்சிக்கு இறைவனின் ஆசியையும், பெரியோரின் வாழ்த்துக்களையும் அமைப்பு நிர்வாகிகள் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மக்கள் என அனைத்து சமூகத்தினரதும் ஆதரவையும் வேண்டுகின்றோம்.

### யாழ்ப்பாணத்தில்

# துடுப்பாட்ட பெரும் போர்களின் வரலாறு

இப்பத்தியில் யாழ்ப்பாணத்தில் துடுப்பாட்ட வளர்ச்சியின் வரலாறு "யாழின் பெரும் போர்கள" என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கிடையில் நுற்றாண்டுகளாக நடைபெறும் "வடக்கின் பெரும்போர்" (Battle of the North), புனித சம்பத்திரிசியார் - யாழ்ப்பாணக் கல்லூரிகளுக்கிடையிலான "பொன்னணிகளின் போா" (Battle of Gold), கந்தரோடை ஸ்கந்தவரோதயா - தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரிகளுக்கிடையிலான "நாயகர்களின் போா" (Battle of the Heros), கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளுக் கிடையிலான "இந்துக்களின் போா" (Battle of the Hindus) எனத் தோற்றம்பெற்று வரலாற்றுக் கதைகளும், புகைப்படங்களும் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.



1910களில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் கிரிக்கெட் அணி

விளையாட்டுக்களின் மன்னன் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டம் உலகளாவிய ரீதியில் பிரசித்திபெற்றது.

முக்கியமாக தென்னாசிய நாடுகளில் செல்வாக்கு செலுத்தும் விளையாட்டுக்களில் முதன்மையானதாக விளங்குகின்றது. அதிலும் குறிப்பாக இந்தியாவில் துடுப்பாட்டத்தை இன்னொரு மதமாகவே பார்க்கின்றனர்.

இங்கிலாந்தில் தோற்றம்பெற்ற துடுப்பாட்டம் இலங்கை - பிரித்தானியாவின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோது அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் பிரித்தானியர்கள் விளையாடியபோது அதனை வியப்புடன் பார்த்த மக்கள் காலப்போக்கில் அவ் விளையாட்டுடன் ஒன்றித்துவிட்டனர் என்றே கூறமுடியும்.

அன்றைய காலத்தில் துடுப்பாட்டத்தைப் பார்த்து இலங்கை மக்கள் இரசிக்கவே முடிந்தது. ஏனெனில் அவற்றைக் கற்றுக்கொடுக்க முன்வரவில்லை. புதுமையாகவும், பணக்கார விளையாட்டாகவுமே இருந்தது.

யாழ்ப்பாண மக்களுக்கு, 1881 இல் வண. பிரட்ரிக் வெப்ஸ்ரர் என்ற பாதிரியார் அறிமுகப்படுத்தினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த வண. பிரட்ரிக் வெப்ஸ்ரர் துடுப்பாட்டத்தை மட்டுமல்லாது, உதைபந்தாட்டத்தையும் அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடமாகாணத்திலும் இரண்டு விளையாட்டுக்களையும் அறிமுகப்படுத்திய பெருமை இவரையே சாரும்.


துடுப்பாட்டம் மாணவர்களிடமும், விளையாட்டு வீரர்களிடமும், மக்களிடமும் சென்று சிறந்த பெறுபேற்றை அடைய வெப்ஸ்ரர் விரும்பியிருந்தார். இதனாலேயே யாழ்ப்பாணம் இன்றும் அவரை மறக்காமல் உள்ளது.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் துடுப்பாட்டத்திற்கு அணியும் உடை அணியவில்லை. இவர்கள் வேட்டியே கட்டுவதால் அதனை மடித்துக் குறுக்காக (கொடுக்கு) கட்டியே விளையாடினார்கள்.

இதனை இன்றைய தலை முறையினர்கள் வியப்பாகவே நோக்குவர். துடுப்பாட்டம் யாழ்ப்பாண மக்களுக்கு அன்று ஒரு புதுமையான அனுபவத்தைக் கொடுத்தது எனலாம். ஆரம்பத்தில் துடுப்பாட்டம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. பின்னர் சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் அறிமுகமாகி விளையாடப்பட இரு பாடசாலைகளுக்கும் இடையில் துடுப்பாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

இரண்டு பாடசாலைகளும் விளையாடி வரும் சந்தர்ப்பத்தில் யாழ். இந்துக் கல்லூரி - புனித சம்பத்திரிசியார் பாடசாலை என துடுப்பாட்டம் பாடசாலை மட்டங்களில் வேகமாகப் பரவியது. இன்று யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது எனின் மிகையல்ல.

இன்னும் வரும்.......!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரம்படி விளையாட்டுக் கழகத்தின் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகள்

கொக்குவில் பிரம்படி விளையாட்டுக்கழகம் நடத்தும் 15 ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டி மே மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30க்கு பிரம்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகியது.

இச்சுற்றுப் போட்டியில் குழு A யில் கோட் பிறதர்ஸ் அணி, அரியாலை ஜனசக்தி விளையாட்டுக்கழகம்,றோயல் விளையாட்டுக்கழகம், பொற்பதி விளையாட்டுக்கழகம், கலாமன்றம் விளையாட்டுக்கழகம், சுப்பர் லெவன் விளையாட்டுக்கழகம், பிரம்படி விளையாட்டுக்கழகம், குமரன் விளையாட்டுக்கழகம், இந்திரகாந்தி விளையாட்டுக்கழகம், மனோன்மணி விளையாட்டுக்கழகம், ஆகியவையும்.

குழுயில் B யில் வை.எம்.எச்.ஏ நேதாஜி விளையாட்டுக் கழகம், ஸ்ரீகலைமகள், பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம், கலைஒளி விளையாட்டுக்கழகம், ஈசிஸ்ரார் விளையாட்டுக்கழகம், ஐ.சி.சி. விளையாட்டுக்கழகம், யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம், A1 குயிடா விளையாட்டுக்கழகம், நல்லூர் பிரதேசசபை விளையாட்டுக்கழகம், மகாமாஜி விளையாட்டுக்கழகம், காளிகோவலடி விளையாட்டுக்கழகம், ஏ.எஸ்.எஸ்.சி விளையாட்டுக்கழகம், ஆகியன மோதுகின்றன.

இச் சுற்றுப்போட்டியில் விலகல் முறையில் அணிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒரு அணி இன்னொரு அணியுடன் தலா ஒவ்வொரு போட்டியில் மோதவேண்டும். வெற்றிபெறும் அணிகள் அரையிறுதிக்கு எட்டு அணிகள் தெரிவாகி, இறுதிப் போட்டி 3ம் திகதி மாலை 3.30 மணிக்கு பிரம்படி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அரியாலை இளங்கதிரை 3 விக்கெட்டுக்களால் வீழ்த்தி சம்பியனானது பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம்

அரியாலை இளங்கதிரை 3விக்கெட்டுக்களால் வீழ்த்தி சம்பியனானது பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம்.

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 6 பேர் கொண்ட வெற்றிக் கிண்ணச் சுற்றுப்போட்டியில் அரியாலை இளங்கதிர் விளையாட்டுக் கழகம் - கொக்குவில் பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம் ஆகியன இறுதிப் போட்டியில் மோதின.

5 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை இளங்கதிர் 4 விக்கெட்டுக்களை இழந்து 28 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம் 3 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

40 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப்போட்டியில் தொடர் நாயகனாகவும், ஆட்ட நாயகனாகவும் ரஜீவ் (அரியாலை இளங்கதிர் விளையாட்டுக்கழகம்) தெரிவானார்.

சிறந்த சகலதுறை வீரராக வி.ஐங்கரன் (பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழகம்) தெரிவானார்.

கடந்த 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேசசபைச்செயலாளர் எம்.சாந்தசீலன், பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் எஸ். வாமதேவன், நல்லூர் பிரதேசசெயலக விளையாட்டு அலுவலகர் எஸ்.சுதாகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**உங்கள் விளையாட்டு நிகழ்வுகள், புகைப்படங்கள் 'நண்பர்கள' சஞ்சிகையில் இடம்பெறுவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

அபிராமி அச்சகம்,
நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
*மின்னஞ்சல் முகவரி*:- nadpu2009@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்லில் நடந்த சுவாரஸ்யங்கள்

இந்தியாவின் பிரிமீயர் லீக்கின் இரண்டாவது ருவென்ரி - 20 போட்டிகள் பல இழுபறிகளுடன் இந்தியாவிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டு நடைபெற்று வருகின்றது.

தென்னாபிரிக்காவில் மிகச் சிறந்த முறையில் நடைபெறும் இப்போட்டிகளில் பல சுவாரசியமான விடயங்களும் நடைபெற்று வருகின்றன.

## தலை அலங்காரம் மாற்றிய மலிங்க!



மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடும் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க தன்னுடைய தலை அலங்காரத்தை மாற்றி யுள்ளார்.

இலங்கை அணிக்காக விளையாடிய மலிங்க தன்னுடைய முதலாவது போட்டியில் இருந்தே தனது வித்தியாசமான தலை அலங்காரத்தால் அதிகளவிலான ரசிகர்களைப் பெற்றிருந்தார்.

இவரது தலையலங்காரத்துக்காகவே அதிகள வில் தென்னாபிரிக்க ரசிகர்கள் உள்ளனர்.

காயம் காரணமாக பல போட்டிகளில் விளையா டாத மலிங்க, மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

2 ஆவது ஐ.பி.எல்லில் 4 போட்டிகளில் விளை யாடிய மலிங்க 9 விக்கட்டுகளை வீழ்த்தி முன் னிலையில் உள்ளார்.







## இளம் வீரர்களை மிரட்டும் சிரேஷ்ட வீரர்கள்

ருவென்ரி -20 போட்டிகளுக்கு சிரேஷ்ட வீரர்கள் தகுதியற்றவர்கள் அவர்கள் டெஸ்ற் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடுவதுதான் பொருத் தமானது என ஐ.பி.எல். போட்டிகளுக்கு முன்னர் பலரும் கருத்து தெரிவித்திருந்தனர்.

ஆனால் இப்போட்டிகளில் சிரேஷ்ட வீரர்கள் அதிரடியாக ஆடி இளம் வீரர்களை மிரட்டி வருகின் றனர். டெண்டுல்கர், ராவிட், ஜெய்சூர்யா என தொடர்ச்சியாக அதிரடியாக ஆட ஓய்வு பெற்ற வீரர்களான கில்கிறிஸ்ட், கும்ளே, ஷேன்வோர்ண் போன்றவர்களும் அதிரடியாக செயற்பட்டு வருகின்றனர்.




சென்றமுறை நடைபெற்ற போட்டிகளிலும், ருவென்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிகளிலும் பிரகாசித்த இளம் வீரர்கள் இம்முறை ஜொலிக்காமல் சிரேஷ்ட வீரர்களின் அனுபவமும் அதிரடியுமே அணிகளை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்கின்றன.

இதன் மூலம் இவ்வருடம் நடைபெறவுள்ள ருவன்ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இளம் வீரர்கள் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு இல்லாது போய்விடும் என அஞ்சுகின்றனர். ஆனால் சிரேஷ்ட வீரர்கள் பலரும் இப்போட்டிகளில் பங்குபற்றாமல் விலகுவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்ஸர்களின் மன்னன்



டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் அணித்தலைவரான அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் விக்கெட் காப்பாளர் அடம் கில் கிறிஸ் இம்முறை தாம் 25 சிக்ஸர்கள் அடிப்பதாக சபதம் எடுத்துள்ளார்.

அத்துடன் தாம் அடிக்கும் ஒவ்வொரு சிக்ஸர்களுக்கும் ஒரு ஏழை மாணவனுக்கு ஒரு சைக்கிளை வழங்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

முதலாவது ஐ. பி. எல் போட்டிகளில் சனத் ஜெய்சூர்யா அதிக சிக்ஸர்களை (35) பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது வரை நடைபெற்ற A போட்களிலும் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் சார்பில் விளையாடிய கில்கிறிஸ்ட் 11 சிக்ஸர்களை விளாசியுள்ளதுடன் 16 பௌன்றிகளையும் விளாசியுள்ளார்

கில்கிறிஸ்ட் சிக்ஸர் மன்னன் மட்டுமல்ல கொடையிலும் தான்.

## பார்வையாளர்களை இரசிக்க வைத்த நாய்!



ஐ.பி.எல். போட்டியில் சென்னை சுப்பர் சிங்ஸ்க்கும் மும்பை இந்தியன்ஸ்க்கும் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் 6வது ஓவரின்போது நாயொன்று மைதானத்தில் புகுந்தது.

சுமார் 10 நிமிடங்கள் மைதானத்தில் ஓடித் திரிந்தது நாய். இதனால் ஊழியர்கள் பெரும்பாடு திண்டாட்டம் ஆகிவிட்டது.


பின்னர் அங்கு விளையாட்டை ரசிக்க வந்த பெண் ரசிகை ஒருவரால் நாய் தந்திரமாக வெளியேற்றப்பட தொடர்ந்து ஆடிய அவ்விரு அணிகளும் மைதானத்தில் தாங்கள் விளையாடி பார்வையாளர்களை கவர்ந்த இரு அணி வீரர்களையும் நாய் தன்னுடைய விளையாட்டுத்தனத்தால் பார்வையாளர்களுடன் இணைந்து அவர்களையும் ரசிக்க வைத்து விட்டது.

## புகுந்து விளையாடும் வருண பகவான்

இப்போட்டிகளில் வருண பகவானின் விளையாட்டால் அதிகம் நொந்து போயிருப்பது மக்கலம் தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிதான் ஏனெனில் 2 போட்டிகளில் தோற்பதற்கு மழைதான் காரணமாகிவிட்டது.

தென்னாபிரிக்காவில் இனிவரும் காலப் பகுதியில் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் இம்முறை வருணபகவான்தான் தொடக்க நாயகனாவார் போலிருக்கிறது.

## சம்பியனானார் நடால்!



அமெரிக்காவின் மொன்டி கார் லோவில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் சர்வதேச ரென்னிஸ் ஆடிர்வில் சம்பியனானார்.

ஸ்பெயினின் ரபேல் நடால் சேர்பிய வீரர் நோவாக் ஜோகோவிக்கை எதிர்த்த நடால் 6 - 3, 2 - 6, 6 - 1 எனும் செட் கணக்கில் வென்றுள்ளார்.

இப்பட்டத்துடன் இவர் 14 வது மாஸ்டர்ஸ் சம்பியனானார். 5வது தடவையாக சம்பியனான நடால் 100 இடங்களுக்கு முன்னர் நியூசிலாந்தின் அன்ரனி வில்டிங்கின் சாதனையைச் சமனாக்கினார்.

தர வரிசையில் மீண்டும்

## இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுடனான 5வது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்று தர வரிசையில் மீண்டும் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

இத் தொடரை ஏற்கனவே நடத்த A போட்டிகளில் 3 -1 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இதனால் 2வது இடத்திலிருந்த அவுஸ்ரேலியா 3வது இடத்திற்கு பின் தள்ளப்பட் டது.

தரவரிசையில் தென்னாபிரிக்க அணி 127 புள்ளிகளைப் பெற்று முதலிடத்திலும் அவுஸ்ரேலியா அணி 123 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்திலும் இந்தியா 122 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்புக் காரணங்களுக்காகவே ஆஸி. டேவிஸ் கோப்பை போட்டியிலிருந்து விலகல்

## ஓராண்டு தடையும் ஒரு கோடி ரூபாய் அபராதமும் விதிப்பு



சென்னை பாதுகாப்பான இடமில்லை என்று கூறி சென்னையில் நடக்கவிருந்த டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியிலிருந்து அவுஸ்திரேலிய அணி விலகியுள்ளது. இதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியின் ஆசிய - ஓசியானா போட்டியின் கடைசி சுற்று ஆட்டத்தில் இந்திய- அவுஸ்திரேலிய அணிகள் மோதவிருந்தன. இதில் வெற்றி பெறும் அணி உலக சுற்றுக்குத் தகுதி பெறமுடியும். முக்கியமான இந்த ஆட்டத்தை சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள எஸ்.டி.ஏ.டி மைதானத்தில் இம் மாதம் 8ம் திகதி முதல் 10ம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் சென்னையில் பாதுகாப்பு பிரச்சினை இருப்பதாகவும் போட்டியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். என நும் அவுஸ்திரேலியா பிரச்சினையைக் கிளப்பியது இதையடுத்து சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் அறிவுறுத்தலின்படி அதன் பாதுகாப்பு அதிகாரி சென்னைக்கு வந்து ஆய்வு செய்த பின்னர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

பாதுகாப்புக் குறித்து நம்பிக்கை தெரிவித்திருந்ததால் திட்டமிட்டபடி போட்டி சென்னையில் நடைபெறும் என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் டேவிஸ் கோப்பை குழு அறிவித்திருந்தது. சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் முடிவுக்கு அவுஸ்திரேலிய டேவிஸ் கோப்பை தலைவர் ஜோன்ஸ் பிட்ஸ் ஜெரால்டு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இந்தியாவில் தேர்தலின்போது சில இடங்களில் வன்முறை நடந்து மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சமீபத்தில் தீவரவாதிகள் ரயிலை சிறைப்பிடித்துள்ளனர். இது எல்லாம் யோசிக்க வேண்டிய விடயம் இல்லையா? ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி வெளிநாட்டிற்கு மாற்றப்பட்டது. ஏன்? என்றெல்லாம் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில் பாதுகாப்பு காரணமாக இந்தியாவில் நடைபெறும் டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியில் பங்கேற்க போவதில்லை என்று அவுஸ்திரேலியா கடந்த மாதம் 25ம் திகதி அதிரடியாக அறிவித்தது.

இது பற்றி அவுஸ்திரேலிய ரென்னிஸ் சங்கத்தின் தலைவர் ஜெப் பொல்லார்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவில் தேர்தல் நடைபெறும் சமயத்தில், எங்களது வீரர்களுக்கு பாதுகாப்பு பெரும் பிரச்சினையாக இருக்கும் என்பதால் இந்தப் போட்டியை வேறு இடத்திற்கு மாற்றும்படி சர்வதேச ரென்னிஸ் சங்கத்தை கேட்டோம். ஆனால் அவர்கள் நிராகரித்து விட்டனர். இதனால் எங்களுக்கு வேறு வழியில்லை. எங்களது அணியை போட்டியில் பங்கேற்க இந்தியாவுக்கு அனுப்ப முடியாது. அதிக ஆபத்துள்ள பகுதிக்கு எங்கள் அணியை அனுப்புவது என்பது கடினமான காரியம்தான். ஆனால், டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டி எங்களுக்கு முக்கியமானதுதான். ஆனால் சில விடயங்கள் ரென்னிஸை விட முக்கியமானதாகும்

சென்னைப் போட்டியிலிருந்து அவுஸ்திரேலியா விலகிவிட்டதால், இந்தப் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்றதாக சர்வதேச சம்மேளனம் அறிவித்துள்ளது. டேவிஸ் கோப்பை ரென்னிஸ் விதிப்படி ஒரு அணி போட்டியிலிருந்து விலகினால் வரும் ஆண்டில் டேவிஸ் கோப்பை ரென்னிஸ் போட்டியில் பங்கேற்க முடியாது. எனவே அவுஸ்திரேலிய ரென்னிஸ் அணியும் ஓராண்டு தடையை எதிர்கொள்ள வேண்டி வரும். 1 கோடி 25 லட்சம் ரூபா அபரதாமும் விதிக்கப்படும்.

இதற்கிடையே சென்னை வர மறுத்த அவுஸ்திரேலிய ரென்னிஸ் சங்கத்தின் முடிவுக்கு இந்திய அரசும், ரென்னிஸ் சங்கமும் கண்டனமும் அதிருப்தியையும் தெரிவித்துள்ளது.

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ்.கில் கூறுகையில், "சென்னையில் பாதுகாப்புக் காரணத்தைச் சுட்டிக் காட்டி அவுஸ்திரேலிய ரென்னிஸ் சங்கம் எடுத்த இத்தகைய முடிவை ஒரு நாளும் அவர்கள் நியாயப்படுத்த முடியாது.

மாநில அரசும், மத்திய அரசும், முழுப் பாதுகாப்பிற்கான உறுதிகளை அளித்துள்ளன. எங்களது உறுதி மொழிகள் மிகவும் திருப்தி அளிப்பதாக டேவிஸ் கோப்பைக் குழுவும், சர்வதேச சம்மேளனமும் கூறியுள்ளன.

சென்னையில் சட்டம் - ஒழுங்கு பிரச்சினை இல்லை. இந்தியாவில் எங்கும் விளையாட்டுப் போட்டிகளுக்கு பாதுகாப்பு அச்சமில்லை." என்றார்.

மேலும் அவர், கடந்த காலங்களில் இங்கிலாந்தில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடந்துள்ளன. இதனைக் காரணம் காட்டி அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அங்கு நடைபெறும் ஆஷஸ் கிரிக்கெட் தொடரிலிருந்து விலகும் முடிவு எடுக்குமா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மறுப்பைத் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட்ட அறிக்கையில்-

"டேவிஸ் கோப்பை ரென்னிஸ் ஒரே ஒரு போட்டி ஒரு வெளிநாட்டு அணி மட்டுமே வரும். ஒரு இடத்தில் அதுவும் சிறிய மைதானத்தில் 3 நாட்கள் மட்டுமே நடைபெறுகிறது.

ஒரே இடத்தில் நடப்பதால் இந்தப் போட்டிக்கு எந்தப் பாதுகாப்புப் பிரச்சினையும் இருக்காது. விளையாட்டுப் போட்டிக்கு இந்தியா மிகவும் பாதுகாப்பான நாடு. போட்டிக்கு உயர்மட்டப் பாதுகாப்பு வழங்க முடியும்."- என்று குறிப்பிட்டிருக்கிறார்

இந்திய ரென்னிஸ் சங்கத் தலைவர் அனில் கண்ணா கூறுகையில், இந்தியா பாதுகாப்பான இடம் இங்கு அவுஸ்திரேலிய வீரர்களுக்குப் பாதுகாப்புப் பிரச்சினை இருக்காது என்று சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் பாதுகாப்பு குழு அறிக்கை அளித்தும், அவுஸ்திரேலிய அணி விலகியிருக்கிறது.

இது அவர்களின் பிடிவாதத்தையும், பொறுப்பற்ற செயலையும் காட்டுகிறது. அவுஸ்திரேலிய ரென்னிஸ் சங்கத்தின் இந்த முடிவுக்கு வீரர்களின் தலையீடே காரணமாயிருக்கும். என்று கருதுகிறேன்." - என்றார்.

"கடந்த ஜனவரி மாதம் சென்னையில் "சென்னை ஓபன் ரென்னிஸ் போட்டி" வெற்றிகரமாக நடந்து முடிந்தது. இந்த போட்டிக்கு போதுமான பாதுகாப்பு அளிக்க தமிழக அரசு உத்தரவாதம் அளித்திருந்தது. இருப்பினும் அவுஸ்திரேலியா எடுத்த இந்த முடிவு துரதிர்ஷ்டவசமானது. மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது" - என்று இந்திய ரென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரங்கின் விளையாட்டுத் துணுக்குகள்

International Cricket Council

## 2011 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறமாட்டாது!

**- ஐ.சி.சி. தெரிவிப்பு -**

தென்னாசிய நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவிருந்தன. ஆனால் பாகிஸ்தானில் பாதுகாப்பு காரணமாக போட்டிகள் நடைபெறமாட்டாது என சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

அண்மையில் துபாயில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ஐ.சி.சியின் தலைவர் டேவிட் மோர்கன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

உலகக் கிண்ணப் போட்டிகளை மிகவும் பாதுகாப்பான முறையில் வெற்றிகரமாக நடத்துவதே எங்களின் முக்கிய நோக்கம். பாகிஸ்தானில் இடம்பெறும் சூழ்நிலையால் அங்கு போட்டிகளை நடத்தமுடியாத நிலை காணப்படுகின்றது. இதற்காக பாகிஸ்தான் ரசிகர்களிடம் நாம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை - பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஐ.சி.சியிடம் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டிகளைத் தமது ரசிகர்கள் புறக்கணிக்கக்கூடும் எனவும் எச்சரித்துள்ளது.

## பிபா தர வரிசையில் அதிக புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தது ஸ்பெயின் அணி




சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் (FIFA) உதைபந்தாட்ட அணிகளின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் ஐரோப்பிய சம்பியனான ஸ்பெயின் 1729 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது.

இந்த அணி இறுதியாக விளையாடிய 31 போட்டிகளில் தோல்வியடையவில்லை. இதுவே அதிக புள்ளிகளைப் பெறக் காரணமாயிருந்தது எனலாம்.

ஜேர்மன் அணி 1362 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. பிபாவினால் 1993 ஆம் ஆண்டிலிருந்தே தரவரிசைப்பட்டியல் வெளியிடப்படுகின்றது.

இதுவரை முதலாம், இரண்டாம், இடங்களுக்கு இடையே அதிக புள்ளிகள் வித்தியாசப்படுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

இத்தரவரிசையில் நெதர்லாந்து ஜேர்மனை விட 2 புள்ளிகளே குறைவாகப் பெற்று 1360 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. பிறேசில் 1275 புள்ளிகளுடனும் நடப்பு உலக சம்பியனான இத்தாலி 1271 புள்ளிகளுடனும் 4ம், 5ம் இடங்களைப் பிடித்துள்ளன.

இறுதியாக விளையாடிய 2 போட்டிகளில் தோல்வியடைந்தபோதும் ஆர்ஜென்ரீனா தொடர்ந்து 6வது இடத்திலும், 8வது இடத்திலிருந்து இங்கிலாந்து ஒரு இடம் முன்னேறி 7வது இடத்திலும் உள்ளன.

97 புள்ளிகளைப் பெற்று இலங்கை அணி 165வது இடத்திலும் 156 புள்ளிகளைப்பெற்று 147வது இடத்தில் இந்தியாவும் உள்ளன.

இத் தரவரிசைப்பட்டியல்எதிர்வரும் 6ஆம் திகதி புதுப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## எஃப்.ஏ. கிண்ண இறுதிப் போட்டிக்கு எவர்டன் கழகம் தகுதி

ஐரோப்பாவின் புகழ்பெற்ற உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான எ.ப்.ஏ. வெற்றிக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கு எவர்டன் கழகம் தகுதி பெற்றுள்ளது.

புகழ்பெற்ற மன்செஷ்டர் கழகத்துடன் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் 4 - 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றதன் மூலம் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது தடவையாகவும்

# சபாலிங்கம் வெற்றிக் கிண்ணத்தை

# தனதாக்கியது யாழ். இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையில் இரண்டாவது தடவையாக நடைபெற்ற சபாலிங்கம் வெற்றிக் கிண்ண ஒருநாள் போட்டியின் வெற்றிக்கனியை சுவைத்தது யாழ். இந்துக் கல்லூரி.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பத்திலேயே விக்கெட்டுக்களை வேகமாக இழந்தது. பின் 5ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த உத்தமகுமாரனும், ராகுலனும் தமக்கிடையே 110 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியினை சரிவிலிருந்து மீட்டனர்.



சமநிலையில் முடிவடைந்த 'இந்துக்களின் போர' வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டபோது

இப்போட்டியில் சதம் பெற்ற உத்தமகுமாரன் 101 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

பின்வரிசை வீரர்களான பங்குஜன் 18, ஜனுதாஸ் 30, பவீந்திரன் 18ஓட்டங்களைப் பெற, கொக்குவில் இந்து 50 ஓவர்கள் நிறைவில் 261 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இறுதிப் பந்தில் கடைசி விக்கெட்டு வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்து சார்பில் பந்துவீசிய உமாதரன் 4 விக்கெட்டுக்களை யும், திருத்தணிகன், நிருஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

262 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற மிகப் பெரிய இலக்கைத் துரத்த ஆரம்பித்த யாழ். இந்துக் கல்லூரி மெதுவாகவே தமது ஓட்டங்களை உயர்த்தியது.

இந்துவின் ஆரம்ப வீரர் டிலக்ஷன் 92 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். 40 ஓவர்களில் 173 என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்து 10 ஓவர்களுக்கு 88 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் கொக்குவில் இந்து தனது களத்தடுப்பையும் பந்து வீச்சையும் கடுமையாக்கினர்.

அப்போது களத்தில் உமாதரன் - சுதாகரன் ஜோடி இருந்தது. போட்டி மிகவும் இறுக்கமான நிலையை அடைந்து பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்குக் கொண்டு வந்தது. 48, 49 ஆவது ஓவர்களில் இவ்விருவரும் பார்வையாளர்களுக்கு வான வேடிக்கை காட்டினர். சிக்ஸர்களும், பௌண்டறிகளும் விளாச 49.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 2 ஆவது தடவையாகவும் சம்பியனாகியது யாழ். இந்து. உமாதரன் 60 ஓட்டங்களையும், சுதாகரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்து சார்பாக பந்து வீசிய ஜனுதாஸ், நிரோஜன், கார்த்திக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டத்தின் நாயகனாக யாழ். இந்துவின் டிலக்ஷனும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக கொக்குவில் இந்துவின் உத்தமகுமாரனும், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளராக யாழ். இந்துவின் புதல்வர்களான உமாசுதன், பவசுதன் ஆகியோர் பெற்றனர்.

இந்த ஒருநாள் போட்டிக்கு முன்னர் நடைபெற்ற 'இந்துக்களின் போர்' என வர்ணிக்கப்படும் இரண்டு நாள் டெஸ்ற் துடுப்பாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த வருடம் 2008 இல் நடைபெற்ற முதலாவது டெஸ்ற் கிரிக்கெட் போட்டியும் சமனில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரியை வீழ்த்தி "நோயல் விமலேந்திரனை" கைப்பற்றியது யாழ். மத்திய கல்லூரி



**நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்திற்கான இரண்டாவது இருபது - 20 கிரிக்கெட் சுற்றுத் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.**

**இச்சுற்றுப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னல் மைதானத்திலும், யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவன மைதானத்திலும் கடந்த 17, 18 ஆம் திகதிகளில் நடைபெற்றன.**

இப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகிய 9 அணிகள் மோதின.

விலகல் முறையில் அமைந்த சுற்றுத் தொடரில் முதல் சுற்று ஆட்டங்களின் முடிவில் வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி அணியும், யாழ். மத்திய கல்லூரி அணியும் இறுதிப் போட்டியில் மோதின.

18 ஆம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரியின் பிக்னல் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்.மத்திய கல்லூரி அணியின் தலைவர் கே.செல்ரன் முதலில் முதலில் யாழ்ப்பாணக் கல்லூரியை துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார்.

ஆரம்பம் முதலே யாழ்ப்பாணக் கல்லூரி அணி பிரகாசிக்காத நிலையில் 9.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது.

பி.ஸ்ரீகுகன், ஜெ.நிகேதன் ஆகியோர் முறையே 21, 11 ஓட்டங்களைப் பெற்றதோடு உதிரிகளாக 16 ஓட்டங்களும் கிடைத்தன.

மத்திய கல்லூரி சார்பில் தர்சன் ஒரு ஓவர் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜெரிக்துஸான், அலன்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 5.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 67 ஓட்டங்களைப்பெற்று 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் ஜேம்ஸ் ஜான்சன் 11 பந்துகளில் ஒரு நான்கு ஓட்டத்தையும், இரண்டு ஆறு ஓட்டங்களும் அடங்கலாக 23 ஓட்டங்களையும், லவநீதன் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் ஒரு நான்கு ஓட்டமும், இரண்டு ஆறு ஓட்டங்களும் உட்பட 20 ஓட்டங்களையும், எட்விட் எடின் ஆட்டமிழக்காமல் 10 பந்துகளில் இரண்டு நான்கு ஓட்டங்களுட்பட 13 ஓட்டங்களையும் எடுத்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் பந்து வீசிய அணித் தலைவர் எஸ். நிரோஷன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

மத்திய கல்லூரி அணியின் வெற்றிக்குத் திருப்பு முனையாக விளங்கிய ரி.தர்சன் ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகன் விருதை வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜே.நிகேதனும் பெற்றுக் கொண்டனர்.

சிறந்த வீரர்களாக யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் எம்.ஹரிப்பிரவீன், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் ஜே.அனோஜன், சுழிபுரம் விக்ரோறியா வின் ஜி.கோவர்த்தனன், கந்தரோடை ஸ்கந்தவரோதயவின் எஸ்.பிரித்விகன், கொக்குவில் இந்துவின் ஆர்.நிரோஜன், யாழ். இந்துவின் எஸ்.உமாதரன், யாழ். மத்தியின் ஜேம்ஸ் ஜானீசன், யாழ்ப்பாணக் கல்லூரியின் ஜே.நிகேதன் மற்றும் தெல்லிப்பழை மகாஜனாவின் வி. கபில்தேவ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு மட்டும் ஏன் இது எப்போதும் நிகழ்கிறது எனத் தெரியவில்லை?



## - கங்குலி -



"எனக்கு மட்டும் ஏன் இது எப்போதும் நிகழ்கிறது என்று தெரியவில்லை" ஆனால் ஒரு விளையாட்டு வீரனாக சர்ச்சைகளை விளையாட்டின் ஒரு பகுதியாகவே பார்க்கிறேன். இவ்வாறு தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். இந்தியா மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி.

அவர் அங்கு மேலும் கூறுகையில் -

என்னைப் பொறுத்தவரை கடவுள் எனக்கு வாழ்க்கையில் நிறைய அளித்துள்ளார். இந்தியா கிரிக்கெட் அணிக்காக நீண்டகாலம் விளையாடினேன். ஆனால் பின்னர் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டனர். ஆனால் அது அணியின் முடிவு. அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். தவிர என்னிடம் அன்பாகவே இருந்துள்ளனர்.

தற்போது என்னை கொல்கத்தா அணியின் தலைவர் பொறுப்பில் இருந்து விலக்கி மெக்கலத்தை நியமித்துள்ளனர். மெக்கலம் மிகவும் திறமையானவர். நான் அணித் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட போதும் தொடர்ச்சியாக் கெல்கத்தா நைட் ரைடர்ஸுக்காக விளையாடுவேன் எனத் தெரிவித்த கங்குலி, மெக்கலத்துக்கு தமது ஆதரவு எப்போதும் உண்டு என்றார்.

இந்திய அணியின் மிகச் சிறந்த அணித் தலைவர் என ஏற்றுக் கொள்ளப்பட்ட கங்குலி இந்திய அணியின் பயிற்சியாளராக கிரேக்செப்பல் இருந்தபோது அவருடன் முரண்பட்டிருந்தார். தற்போது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் பயிற்சியாளரான புக்கனனுடனும் முரண்பாடு தோன்றியே அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலக்கப்பட்டார். பாவம் கங்குலி பயிற்சியாளர்களுக்கும் என்ன பொருத்தமோ தெரியவில்லை. அவர்களுடன் முட்டிமோதுகிறார்.

# சச்சினுக்கு இங்கிலாந்தின் பிறந்தநாள் பரிசு!



உலகின் பிரபலங்களை மெழுகுச்சிலைகளாக தத்ரூபமாக வடிவமைத்து காட்சிப்படுத்தும் லண்டனின் டுஸாட் சீமாட்டி அருங்காட்சியகம் (Medam Duruazadz musium) மாஸ்டர் பேட்ஸ்மன் (Master Batsman) எனப் புகழ் பெற்ற சச்சின் டெண்டுல்கருக்கும் மெழுகுச்சிலை 20ம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

இதன் அறிமுக விழா கடந்த 13ம் திகதி மும்பையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சச்சின் டெணடுல்கர் தனது குடும்பத்துடன் பங்குபற்றியிருந்தார்.

சச்சின் சிலையை 1 கோடி ரூபா செலவில் 3 மாதங்களாக வடிவமைத்திருந்தனர். இது தொடர்பாக சச்சின் கூறுகையில் -

இச்சிலையை நான் ஆற்றிய பங்கிற்கு கிடைத்த பரிசாகவே கருதுகிறேன். உலகின் பல்துறையைச் சேர்ந்த பிரபலங்களைச் சிலைகளாக் அமைத்துள்ள இப்பட்டியலில் என்னையும் இடம்பெறச்செய்ததில் மகிழ்ச்சியாகவே உள்ளேன்.

என்னுடைய 15வது வயதில் இருந்தே டுஸாட்ஸ்க்கு செல்வதற்கு ஆசைப்பட்டேன். நான் பல தடவைகள் இங்கிலாந்திற்கு சென்ற போதும் கிரிக்கெட் அட்டவணைகளால் அங்கு செல்வதற்கு எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இரண்டாவது ஐ.பி.எல். போட்டியின் முடிவடைந்ததும் எங்கு சென்று எனது சிலையைப் பார்ப்பேன் என்றார்.

இவ் அருங்காட்டிசியகத்தில் கிரிக்கெட்டின் பிரபலங்களான பிரைன்லாரா, இயன்பொத்தம், ஷேன்வோர்ன் ஆகியோரின் சிலைகள் இடம்பெற்றுள்ளதுடன் இந்தியாவைச் சேர்ந்த மகாத்மாகாந்தி, இந்திராகாந்தி, அமிதாப்பச்சன், ஷாருக்கான், ஐஸ்வர்யாராய் ஆகியோருடைய சிலைகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் கிரிக்கெட்சபை வீரர்களின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்!



**- வசீம் -**

பாதுகாப்புக்கு உள்ளூர் நிர்வாகத்தை மட்டும் நம்பாமல் வெளிநாட்டு வீரர்களுக்கு பாதுகாப்பை அதிகரிக்கும் முயற்சியில் பாகிஸ்தான் கிரிக்கெட்சபை (பி.சி.பி) ஈடுபடவேண்டும். என முன்னாள் வீரர் வசீம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

இலங்கை வீரர்களின் மீது லாகூரில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் பாகிஸ்தான் சென்று விளையாட எந்த அணியும் தயாராக இல்லை.

அங்கு நடக்கவிருந்த 2011ஆம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிகளும் சமீபத்தில் அங்கிருந்து மாற்றப்பட்டது. இந்த நிலையில் வீரர்களின் பாதுகாப்பு குறித்து முன்னாள் வீரர் வசீம் அக்ரம் கூறியவை வருமாறு-

பி.சி.பிக்கு தற்போது அதிக நிதி தேவைப்படுகிறது. எப்படி இருப்பினும் வீரர்களுக்கு குண்டு துளைக்காத உடைகளும், அவர்கள் செல்வதற்கு குண்டு துளைக்காத பஸ்களும் வாங்க வேண்டும்.

மற்றைய நாடுகளில் வீரர்களின் பாதுகாப்பை தனியாரிடம் விட்டுவிடுவதைப் போல இங்கும் அப்படியே செய்ய வேண்டும். இப்படி எடுக்கும் உறுதியான நடவடிக்கைகளால் தான வெளிநாட்டு வீரர்களின் நம்பிக்கையைப் பெறமுடியும்.

பாகிஸ்தான் அணிக்கு பந்துவீச்சுப் பயிற்சியாளராக வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படி வருவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் எனது பணியைச் திறம்படச் செய்வேன்.

தென்னாபிரிக்காவிடம் ஒரு நாள் தொடரை இழந்த அவுஸ்திரேலிய அணி டுபாய் வந்துள்ளது. அணித் தலைவர் பொண்டிங், மைக்கல் ஹசி, மைக்கல் ஜோன்சன் இல்லாததால் அவுஸ்திரேலிய அணி பலவீனப்பட்டுவிடவில்லை. அணியில் இன்னும் திறமையான வீரர்கள் உள்ளனர். எந்த வீரர் வந்தாலும், சென்றாலும் அதிக வேறுபாடின்றி ஒரே மாதிரியான ஆட்டத்தை வெளிப்படுத்தும் ஒரே அணி அவுஸ்திரேலியா தான்" - இவ்வாறு வசீம் அக்ரம் கூறினார்.



# நீண்ட இடைவேளை போட்டிக்கு எதிராக இருக்கிறது - சச்சின்

டெக்கான் அணியுடனான தோல்விக்குப் பின்னர் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் டெண்டுல்கர் கூறுகையில்-

"10 ஓவர்கள் இடைவெளிவரை நாங்கள் நல்ல நிலையில் இருந்தோம். அதன் பின்னர் எங்களது வேகம் சற்றுக் குறைந்தது. ஏழரை நிமிட இடைவெளி ஏப்ரல் 27இல் நடைபெற்ற போட்டி எங்களுக்கு எதிராக அமைந்து விட்டது.

இதன் பின்னர் விக்கெட்டுக்களை பறிகொடுத்ததால் இலக்கை எட்ட முடியவில்லை. நிறைய நேரம் ஆட்டம் எங்களது கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால் ஒஜா பந்து வீச வந்தபோது, ஆட்டம் எங்கள் கையை விட்டு போய் விட்டது" என்றார்.

டெக்கான் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் கூறுகையில் - "தொடர்ந்து 3 வெற்றிகளைப் பெற்று இந்தத் தொடரை இனிதாக தொடங்கியுள்ளோம். கடந்த ஆண்டு பெற்ற புள்ளிகளை விட இந்த ஆண்டு அதிகமான புள்ளிகளை தொடக்க நிலையிலே பெற்றிருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது" என்றார்

ஆட்ட நாயகன் விருது பெற்ற ஒஜா கூறுகையில் "உலகின் தலை சிறந்த துடுப்பாட்டக்காரர் டெண்டுல்கருக்கு பந்து வீசும் போது நான் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டேன். எனது அணியினர் எனக்கு ஆதரவாக இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது" - என்றார்

# போத்தா மீது மீண்டும் தடை விதிக்கப்படுமா?



தென்னாபிரிக்காவின் உப அணித் தலைவர் ஜெஹான் போத்தாவின் பந்து வீச்சு மீது மீண்டும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின் நடுவர்களான ரூடி காட்சன் அசோக டீசில்வா ஆகியோர் பந்தை எறிவதாக புகார் கூறியுள்ளார்.

போத்தாவிற்கு பயோ மெக்கானிக்கல் சோதனை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தமது புகாரில் கூறியுள்ளார். இப்பரிசோதனைகள் 21 நாளில் நடாத்தப்படும்.

இது போன்றதொரு குற்றஞ்சாட்டு 2006ம் ஆண்டும் போத்தா மீது விதிக்கப்பட்டது.

பின்னர் அவர் தனது உடற் தகுதியை வெளிப்படுத்திய பின்னரே 2007 ஆம் ஆண்டில் இருந்து இவர் மீண்டும் வந்தார். இதனால் இவர் மீது தடை விதிக்கப்படலாம் என ஊகங்கள் எழுந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். தரும் பதிவுப் படங்கள்



























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீற்றர்சன் - ராவிட் நாடு திரும்புவதால் அணித் தலைவராகிறார் ஜக்கலிஸ்!

ஐ.பி.எல். தொடரிலிருந்து இந்தியா திரும்புகிறார் டிராவிட். விரைவில் அணித் தலைவர் பீற்றர்ஸன் இங்கிலாந் செல்லும் நிலையில் பெங்களூர் அணியின் நிலமை பரிதாபமாகவுள்ளது.

ஐ.பி.எல். இரண்டாவது கட்டப் போட்டிகள் தென்னாபிரிக்காவில் நடைபெறுகிறது.

இதில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவராக இருந்த டிராவிட் நீக்கப்பட்டு, இலங்கை மதிப்பில் 15 கோடி ரூபாவுக்கு வாங்கப்பட்ட இந்திலாந்தின் பீற்றர்ஸன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

பீற்றர்ஸன் தலைமையில் இம்முறை பெங்களூர் அணி நான்கு போட்டிகளில் மட்டுமே வென்றுள்ளது.

கடந்த தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் வரிசையில் 144 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இவர் தனது மனைவியின் 2வது பிரசவத்திற்காக இந்தியா திரும்புகிறார். இது குறித்து டிராவிட் அணி நிர்வாகத்திடம் ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

பீற்றர்ஸனும் டெஸ்ட் தொடரில் பங்கேற்க இங்கிலாந்து திரும்பவுள்ளார். இதையடுத்து புதிய அணித் தலைவராக கலீஸ் நியமிக்கப்படவுள்ளார்.

# அணி வெற்றிப் பாதைக்குச் சென்றாலே மீண்டும் தென்னாபிரிக்கா செல்வேன்!



தென்னாபிரிக்காவிலிருந்து கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் உரிமையாளரான ஹொலிவூட் நடிகர் ஷாருக்கான் தேர்தலில் வாக்களிப்பதற்காக இந்தியா திரும்பியிருந்தார்.

அவர் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்:

தோல்விகளைச் சந்தித்துவரும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி மீண்டும் வெற்றிப் பாதைக்குத் திரும்பினாலே நான் மீண்டும் தென்னாபிரிக்கா செல்வேன் என்று உறுதியாகக் கூறுனார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் - புதிய அணித் தலைவர் மக்கலம் திறமையானவர். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை தற்போது எனது அணி தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வருகிறது. மீண்டும் நான் தென்னாபிரிக்கா செல்வதென்றால் எனது அணி வெற்றிகளைப்பெறும் பட்சத்தில் மட்டுமே.



அணித் தலைவர் பதவியிலிருந்து கங்குலியை நீக்கிய போதும் அவர் அணியின் வெற்றிக்காக கடுமையாக உழைக்கிறார் என்று கூறிய போது - அவரை மீண்டும் அணித் தலைவராக நியமிப்பீர்களா? என செய்தியாளர்கள் வினவியபோது-

அவரை மீண்டும் அணித் தலைவராக்குவது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எனக்கு கங்குலியை அணித் தலைவராக நியமிக்குமாறு பல முன்னாள் வீரர்கள் அறிவுறுத்துகின்றனர். ஆனால் இதற்கு காலமே பதில் சொல்லும் என்றார்.

இதேவேளை - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் தலைவர் மக்கலம் தமது அணி காலிறுதிக்கு முன்னேறாதுவிடின் தமது பதவியை துறக்கத் தயாராகவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# இந்திய ஹொக்கி சாதனை வீரர் திலிர் திர்கி ஓய்வுபெறுகிறார்



இந்திய அணியின் "ஹொக்கிச் சுவர்" எனப் புகழப்படும் திலிப்திர்கி வரும் கொமன்வெல்த் போட்டிகளின் பின் ஓய்வுபெறுகிறார்.

இந்திய அணி சார்பில் அதிக போட்டிகளில் பங்கு பற்றிய சாதனை வீரராகவும் இவர் விளங்குகிறார்.

# ராவிட்டுக்கு ஆண் குழந்தை

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடிவரும் இந்திய முன்னாள் அணித் தலைவர்களுள் ஒருவரான ராகுல் ராவிட் இடையில் மனைவியின் பிரசவத்திற்காக நாடு திரும்பியிருந்தார்.

தற்போது அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தைக்கு "சமித்" எனப் பெயர் வைத்துள்ளார்.

தற்போது விளையாட்டு வீரர்கள் தங்களின் வாரிசுகளை தங்களின் விளையாட்டுத்துறைகளில் களமிறக்கத் தயாராகிவருகிறார்கள். இவ்வரிசையில் ராவிட்டும் இணைவார். இவருக்கு ஏற்கனவே ஆண் குழந்தையொன்று உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா மீது ஐ.சி.சி. நடவடிக்கை எடுக்குமா?

பாகிஸ்தானின் இளம் பந்துவீச்சாளர் சயீட் அஜ்மலின் பந்துவீச்சு மீதும் பந்தை எறிவதாக தற்போது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் அசாத் ரௌ.ஃப், பில்லி பௌசார் ஆகிய நடுவர்களே அஜ்மல் பந்தை எறிவதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடந்த வாரம் துபாயில் நடைபெற்ற பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியிலேயே இவர்கள் அஜ்மல் மீது புகார் அளித்துள்ளனர்.

சமீபத்தில் தென்னாபிரிக்க வீரர் போத்தா மீதும் அவுஸ்திரேலிய நடுவர்கள் குற்றஞ்சாட்டியதன் பின்னணியில் அவர் "பயோ மெக்கானிக்கல்" பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

அவுஸ்திரேலியாவின் பல நடுவர்களும் பல்வேறு காலகட்டங்களில் ஏனைய நாட்டு வீரர்களுக்கு எதிராக இத்தகைய குற்றச்சாட்டுக்களை சுமத்தி வந்துள்ளனர்.

ராஜேஸ் அவுக்கார், அப்துல் ரசாக், முத்தையா முரளிதரன், ஹர்பஜன்சிங் என குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் பட்டியல் நீள்கிறது.

அடிக்கடி வீரர்கள் மீது இவ்வாறான புகார்களை அளிப்பது அவுஸ்திரேலிய நடுவர்களின் வாடிக்கையான விடயம் இதனால் அந்நாடுகளின் கிரிக்கெட் சபைகள் இவர்கள் மீது கடும் அதிருப்தி அடைந்துள்ளன.

அவுஸ்திரேலியா மீது ஐ.சி.சி. கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட நாடுகளின் கிரிக்கெட் சபைகள் கோரியுள்ளனர்.

## விளையாட்டு நிகழ்வுகளின் படத்தொகுப்புகள்














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன உதைபந்தாட்டத்தின் வரலாறு

இன்றைய உலகில் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட விளையாட்டுக்களில் ஒன்றாகவும் உடலுக்கு வலிமையும், உற்சாகமும் தரக்கூடிய ஆற்றலைத் தூண்டக்கூடிய விளையாட்டாகவும் உதைபந்தாட்டம் - காற்பந்தாட்டம் (Foot ball) விளங்குகின்றது.

நவீன உதைபந்தாட்டத்துக்கு ஏறக்குறைய 140 வயதுடையது எனலாம். இருந்தபோதும் 4000 ஆண்டுகளுக்கு முன்னரே சீனாவில் தோற்றம் பெற்று விட்டதாகச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன.



ஆனால் நவீன உதைபந்தாட்டத்தின் (Modern Soccer) பிறப்பிடமாக இங்கிலாந்து நாடு விளங்குகிறது. இங்கிலாந்து என்ற தொட்டிலில் பிறந்து, வளர்ந்த பிள்ளையாக உதைபந்தாட்டம் இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

## பிபாவின் தோற்றம்

1940 இல் பிரான்ஸின் தலைநகரமான பாரிஸில் கூடிய ஏழு நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், டென்மார்க், ஒல்லாந்து, சுவிற்சர்லாந்து ஆகியவை இணைந்து "சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனத்தை" (Federation of International foot ball Association) உருவாக்கின. இதுவே F.I.F.A. என அழைக்கப்பட்டு உலகின் உதை பந்தாட்டம் தொடர்பான சகல விடயங்களையும் கவனித்து வருகிறது. இதன் ஓர் அங்கமே சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளனம் F.I.F.A. (பிபா) இன் முதலாவது உலகக் கிண்ணப் போட்டியின்போது இலங்கை உதைபந்தாட்டச் சங்கம் உருவானது. இதன் தொடர்ச்சியான வளர்ச்சியாகவே யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் 1943 இல் ஸ்தாபிக்கப்பட்டது.

## மைதானத்தில் வீரர்கள் நிற்கும் நிலை

இந்த உதை பந்தாட்ட விளையாட்டின் ஆடுகளத்தை நோக்கினால், ஆடுகளமானது 120m நீளமும், 90m அகலமும் கொண்ட செவ்வக வடிவ அமைப்புடையது. 11 வீரர்கள் பங்கு பற்றி விளையாடும் இந்த விளையாட்டில் ஒவ்வொரு வீரரும் ஒவ்வொரு நிலைகளுக்குப் பொறுப்பாக இருப்பர்.

அந்த 11 நிலைகளாவன:-

1) பேற்றுக் காவலன் (Goal keeper)
2) வலது பின்னணி (Right back)
3) மையப் பின்னணி (centre back)
4) இடது பின்னணி (Left back)
5) இடது அரை (Left half)
6) வலது பின்னணி (Left back)
7) மைய அரை (Centre half)
8) வலது சிறகு (Right wing)
9) இடது சிறகு (Left wing)
10) மைய முன்னணி (Centre forward)
11) வலது / இடது உள் (Right / Left in)

இவர்களை விட இரண்டு பதில் வீரர்கள் (Sub Stitutes) ஆட்டத்தின்போது அனுமதிக்கப்படுவர். ஆட்டம் ஆரம்பித்ததிலிருந்து முடியும்வரை ஆட்டம் சார்பான சகல தீர்ப்புக்களுக்கும் பொறுப்பு வகிப்பவர் மத்தியஸ்தரே, (Referee) இவருக்கு உதவியாக இரு பக்கநடுவர்கள் (Lines men) கடமைபுரிவர். இவர்கள் அனைவரும் F.I.F.A. மத்தியஸ்தத்தின் அங்கத்தவர்களாக இருக்கும் போது சிறப்பாக அமையும்.

இந்த உதைபந்தாட்டம் சர்வதேச வழக்கில் ஆட்ட நேரங்கள் 45 நிமிடம் - 5 நிமிடம் - 45 நிமிடம் ஆகும். ஆட்டம் சமநிலையில் முடியுமாயின் சம நிலை தவிர்ப்புக்காக மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்குவர். இந்தக் காலப் பகுதியில் யாதாயினுமொரு அணி கோல் அடித்தவுடன் (Golden Goal) ஆட்டம் முடிவுக்கு வரும்.

தொடர்ந்தும் இக்காலப்பகுதியில் சமநிலை தொடருமாயின் சமநிலை தவிர்ப்பு நேரடி உதை வழங்கப்படும் (Direct Kicks). உதைபந்தானது கோள வடிவாக தோல் அல்லது அனுமதிக்கப்பட்ட மூலங்களால் ஆக்கப்பட்டிருக்கும். பந்தின் சுற்றளவு 0.68m - 0.71m ஆகவும் நிறை 396g - 453g ஆகவும் இருக்கும்.

பந்தானது காலால் உதைக்கப்பட்டோ, தலையால் முட்டப்பட்டோ அல்லது கைகள், புயங்கள் தவிர்ந்த முண்டப் பகுதியில் பட்ட நிலையில் பேற்றுக் கம்பங்களுக்கிடையிலும், குறுக்குச் சட்டத்திற்குக் கீழும் பேற்றுக் கோட்டைத் தாண்டும்போது கோல் (Goal) பெறப்படுகிறது.

## உதை பந்தின் பிரபலங்கள்

இன்று சர்வதேச ரீதியாக பல நாடுகள் உதைபந்தாட்டம் ஆடிவந்தாலும் பிறேசில் நாடே உதைபந்தாட்டத்தின் முடிசூடா மன்னனாகத் திகழ்கிறது. உலகிலேயே அதி கூடிய பேற்றுக்களை (Goals) போட்டி வீரரான பீலே (Pele) பிறேசில் நாட்டின் முடிசூடா மன்னனாக மக்களால் போற்றப்படுகிறார்.

இன்று சர்வதேச ரீதியில் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்ட பிறேசில் வீரர்களான றொனால்டோ, றொமாறியோ, றிவால்டா போன்றவர்களும், ஓய்வு பெற்று இன்றும் வாழும் ஆர்ஜென்ரீன வீரரான மரடோனாவையும் குறிப்பிடலாம்.

பிறேசிலை அடுத்து பிரான்ஸ், ஜேர்மனி, ஆர்ஜன்ரீனா, இத்தாலி, உருகுவே, இங்கிலாந்து போன்ற நாடுகள் பலம் வாய்ந்த உதைபந்தாட்ட அணிகளை அன்று முதல் கொண்டுள்ளன. இன்று பல நாடுகள் இந்த விளையாட்டில் ஈடுபட்டு போட்டிபோட்டு வருகின்றன.

F.I.F.A. இன் முன்னாள் தலைவர் Dr.Havelong "உதை பந்தாட்டம் ஒரு உலக மொழி, இது உலக மக்களை ஒன்றிணைக்கும் உறுதியான பாலமாக அமைகிறது" எனக் கூறியிருக்கின்றார்.

**"அடுத்த இதழில.... உலகம் விரும்பும் உதைபந்தாட்டத்துக்கு ஒலிம்பிக்கில் கதவடைப்பு ஏன்?"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## யாழ். மாவட்ட விளையாட்டுத் திடல்களிலிருந்து.....







இச்சஞ்சிகை 'நண்பர்கள்' குழுமத்தினால் 01.05.2009 அன்று சுரபி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org